வைப்பதற்குச் சீக்கிரம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சர்க்கார் மோட்டார் வெஹிகிள்ஸ் ஆக்டின் கீழே திருச்சி நகராட்சி மன்றத்திற்கு யோசனை கூறுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதுபற்றி நகராட்சியினர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னேன். ஏதாவது அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு தவறினுல், மோட்டார் வெஹிகிள்ஸ் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டுமா என்று அரசாங்கம் பின்னுல் யோசித்து, வேண்டுமானுல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.

அளியார் அணை

* 640 **கேள்வி.—திரு. ஜே. மாதா கவுடர் :** கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் நயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அளியாறு அணை வேலைகள் முடிந்துவிட்டனவா ?

(இ) எப்போது விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுக்கப் படும் ?

(உ) இதனுல் எத்தனை எக்கர் நிலம் பயன் அடையும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Aliyar dam works are almost nearing completion.

(*b*) Water is proposed to be let down from the Reservoir during October 1962, if sufficient water is available.

(*c*) About 7,500 acres are proposed to be benefited under Vettaikaranpudur and Pollachi Canals initially subject to availability of water in the Aliyar river.

Sir, after submission of this answer, I would like to give the latest position about paragraph (*b*). I have to state that sufficient water is available now. I am glad to say that water is available and water will be let out on the period fixed, i.e., in October.

திரு. ஜே. மாதா கவுடர் : பொள்ளாச்சி தாலுகாவில் எந்தெந்த கிராமங்களுக்குப் பாயும் என்று சொல்ல முடியுமா ? எத்தனை ஆயிரம் ஏக்கர் நிலங்களுக்கு பாயமுடியும் என்பதைப்பற்றியும் சொல்ல முடியுமா ?

கனம் திரு. வெ. ராமையா : ஏக்கரைப் பொறுத்தவரையிலும் 7,500 ஏக்கர். என்னென்ன கிராமங்களுக்கு தண்ணீர் பாயும் என்று திட்டவட்டமாக என்னுல் இப்பொழுது சொல்ல முடியாது. ஆனுல் இரண்டு கால்வாய்களுக்கு அதாவது வேட்டைக்காரன் புதூர் கால்வாய், பொள்ளாச்சி கால்வாய்களுக்கு தண்ணீர் விடப் படும்.

திரு. க. ர. நல்லசிவம் : புஞ்சைப் பாசனத்திற்கு தண்ணீர் விடப்படுகிறதா அல்லது நஞ்சைப் பாசனத்திற்கு தண்ணீர் விடப் படுகிறதா, புஞ்சைப் பாசனத்திற்கு தண்ணீர் விட்டால்,

25th July 1962]

பயிர் கட்டுப்பாடு இல்லாமல் புஞ்சைப் பயிர் எல்லாம் வைத்துக் கொள்ளலாமென்று ஏதாவது உத்திரவிடப்பட்டுள்ளதா ?

கனம் திரு. வெ. ராமையா : இப்பொழுது இருக்கக்கூடிய முறைப்படி நஞ்சைக்குத்தான் தண்ணீர் விடமுடியும்.

பாலிடெக்னிக்குகள்

*** 641 கேள்வி.—திரு. முனு ஆதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா--

(அ) தமிழ்நாட்டில் பெண்களுக்கான அரசாங்க பாலிடெக்னிக் அல்லது தொழில் கல்வி நிலையங்கள் எங்கு உள்ளன ?

(இ) எத்தனை பேர் இதுவரை பயிற்சி பெற்றுவருகிறார்கள் ?

(உ) செங்கல்பட்டு மாவட்டத்தில் அத்தகைய கல்வி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is at present one Industrial Training Centre for Women in the Madras City. A Women's Polytechnic will also be started in the city during this year.

(*b*) Since August 1956, when this Government took over the Industrial Training Centre from the Government of India, 462 persons have completed their training in the institute. One hundred and thirty-three persons are now undergoing training.

(*c*) There is a proposal to start during 1962–63 an Industrial Training Institute in Chingleput district with a seating capacity of 280. This will cater for both boys and girls. There is no proposal to start a women's Polytechnic in the district during the year.

திரு. கே. டி. கோசல்ராம் : அரசாங்கம் இந்த வருஷத்திற்கு எத்தனை பாலிடெக்னிக்களுக்கு அனுமதி அளித்திருக்கிறார்கள் ? எந்தெந்த இடத்திலெல்லாம் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இந்த வருஷத்திற்கு எவ்வளவு பாலிடெக்னிக்குகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு தனிக்கேள்வி வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இந்த ஆண்டில் தனியார் துறையில் திருநெல்வேலி ஜில்லாவில் ஏதேனும் பாலிடெக்னிக் ஆரம்பிப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ? எத்தனை பிள்ளைகளுக்கு ? என்னென்ன பாடதிட்டங்களுக்கு என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. ஆர் வெங்கட்டராமன் : திருநெல்வேலி ஜில்லாவில் தனியார் துறையில் ஒரு பாலிடெக்னிக் வைப்பதற்கு அனுமதி கேட்டிருந்தார்கள். அதற்குச் சர்க்கார் சில நிபந்தனைகளைச்